# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு. பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா. பன்னீர்செல்வம்**
**சி.ஆர். இராஜகுமார்**
**என். ஜனார்த்தனன்**
**தி. கலைசெல்வி**
**எம். சௌந்தரராஜன்**
**ஏ. பெரியசாமி**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**


**ஊடகச்செய்தி எண்.11/2017** **நாள்.22.03.2017**

## ஊடகச் செய்தி

## அடக்குமுறையால் ஒடுக்கமுடியாது போராட்டங்களை! போராட்ட நெறி வெறியானால் அராஜகங்கள் மட்டுமல்ல, அரசாங்கங்களும் புரண்டுபோகும்!

ஊரக வளர்ச்சித்துறையில் பணிபுரியும் ஊழியர்கள் 14-03-2017 முதல் 9 நாட்களாக போராட்டம் நடத்தி வருகிறார்கள். முதலில் வேலை நிறுத்தப் போராட்டமாக இருந்த இப்போராட்டம் அரசுடனான மூன்று நாட்கள் தொடர் பேச்சு வார்த்தை தோல்வியடைந்ததன் காரணமாக போராட்டம் தீவிரமடைந்தது. ஊரக வளர்ச்சித்துறை ஊழியர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கடந்த இரண்டு காத்திருப்பு போரட்டம் நடத்தினர். இன்று இயக்குநரகத்தை நோக்கி பெருந்திரள் முறையீடு செய்ய திட்டமிட்டிருந்த நிலையில் அவர்களை காவல்துறையினர் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளனர். நடத்தை விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்படுவதும் போராட்டத்தை தீவிரப்படுத்தினால் கைது செய்து சிறையிலடைப்பதும் அரசின் அடக்குமுறை அதிகாரமாகியுள்ளது.

நடக்கும் போராட்டம் எப்போதோ ஒப்புக்கொண்ட கோரிக்கைகளை அரசு இனிமேலும் காலதாமதம் செய்யாமல் நிறைவேற்ற வேண்டும் என்பதற்கான போராட்டமாகும். காலியாக விடப்பட்டுள்ள பணியிடங்களும் கடுமையான பணிச்சுமையும், மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய பெரும் பொறுப்பை கவனித்து வரும் ஊரக வளர்ச்சித்துறை ஊழியர்களுக்கு பெரும் சவாலாக மாறியுள்ள நிலையில் அரசிடம், அது நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்ட கோரிக்கைகளை மேலும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக நிறைவேற்றிட பேசிப் பார்த்தும் வாதாடிப் பார்த்தும் பலனில்லாததால் தெருவில் இறங்கி போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்கு ஊழியர்கள் ஆளாகியுள்ளனர்.

ஏற்கெனவே நடந்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில் ஊரக வளர்ச்சித்துறை ஊழியர்கள் தங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை காத்திருப்பு போராட்டமாக மாற்றினர். கடந்த இரண்டு நாட்களாக மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன்பு அரசு ஒப்புக்கொண்ட கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை காத்திருப்பதாக அறிவித்தனர். அதன் பிறகு இயக்குநரகம் நோக்கி பெருந்திரள் முறையீட்டு பேரணி நடத்தத் தீர்மானித்துள்ளனர். தமிழ்நாடுஅரசு ஊழியர் சங்கம், இவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை அரசு உடனே பரிசீலித்து நிறைவேற்ற கோரிக்கை விடுத்து அரசுக்கு அழுத்தம் கொடுத்தன் காரணமாக அமைச்சருடன் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடானது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத் தலைவர்களும் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை சங்க நிர்வாகிகளும் அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்த நேற்று 21-03-2017ம் தேதி நண்பகல் 12.00 மணிக்கு நேரம் ஒதுக்கப்பட்டு அது பிறகு 3.00 மணியாக மாற்றப்பட்டது. 3.00 மணி பேச்சு வார்த்தையில் அமைச்சர், அரசு ஒப்புக்கொண்ட எந்த கோரிக்கைகளையும் உடனடியாக நிறைவேற்ற முடியாது, நீங்கள் வேண்டுமானால் போராட்டம் நடத்திக் கொள்ளுங்கள் என தெரிவித்தனர்.

நடப்பது மக்கள் நலன் சார்ந்த அரசுதானா? என்ற சந்தேகம் அரசு ஊழியர்களுக்கு எழுந்துள்ளது. அரசு ஊழியர்கள் அரசிடம் தங்கள் வாழ்வாதார கோரிக்கைகளை முன் வைப்பதும் அதற்கு அரசு ஒப்புக்கொண்டு கூடிய விரைவில் நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்துவிட்டு நிறைவேற்றாமல் காலம் கடத்துவதும், ஒப்புக்கொண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற ஊழியர்கள் வலியுறுத்துவதும் அரசு மௌனமாயிருப்பதும், போராட்டம் செய்தால் அடக்குமுறை சட்டங்களை அவிழ்த்துவிட்டும் காவலர்களை ஏவிவிட்டும் கொடுங்கோன்மை செய்வதும் சர்வாதிகாரத்தின் உச்சங்கள்.

ஊரக வளர்ச்சித்துறை ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் தமிழகம் முழுவதும் குடிநீர் வழங்கல் பணி, கிராமப்புற வேலை உறுதி திட்டப் பணி, தூய்மை பாரத இயக்கப் பணி, தனிநபர் கழிப்பறை திட்டப் பணி, மத்திய அரசின் வீடு வழங்கும் திட்டப்பணி போன்ற பல ஊரக வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதற்கு யார் பொறுப்பு ஆட்சியாளர்களா? அரசு ஊழியர்களா? தொடர்ந்து இதுபோன்ற போக்கினை அரசு கடைபிடித்தால் அரசு ஊழியர்கள் போராட்டம் மக்கள் போராட்டமாக உருமாறும் என்பதையும் ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

பொய்யான உறுதிமொழிகள் கொடுத்து காலம் கடத்துவதும், ஒப்புக்கொண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற முறையிட்டால் வாளாயிருப்பதும், போராட்டத்திற்குள் புகுந்தால் வாளெடுத்து வீசுவதும் அறுவெறுக்கத்தக்க அதிகார வர்க்க அரசியலின் அடிப்படை சித்தாந்தமாக மாறியுள்ளது. உரிமைக்காக போராடும் ஊழியர்களை நடத்தை விதிகளைக்காட்டி நசுக்கப் பார்ப்பதும், முறையான பல கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டு கொடுத்த வாக்கிலிருந்து வழுவி நிற்கும் அரசாங்கத்தை எதிர்த்து போரிட்டால் காவல்துறை கைது சிறையிலடைப்பு போன்ற அடக்குமுறை அதிகாரத்தை சுழற்றுவதும் நல்ல அரசுக்கு அழகல்ல. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், அரசின் இந்த சர்வாதிகாரப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது.

கைது நடவடிக்கைகள் அல்ல, நன்னடத்தை விதிகள் அல்ல, எஸ்மா, டெஸ்மா போன்ற ஏராளமான அடக்குமுறை சட்டங்களை எதிர்த்து நின்றவர்கள் அரசு ஊழியர்கள் என்பதை இந்த அரசுக்கு நினைவுகூற விரும்புகிறோம். 2003ம் ஆண்டு இதேபோன்றதொரு நிலை தோன்றியபோது அதை எதிர்த்து நின்றதும், ஒரே அரசாணையில் 1,76,000 ஊழியர்களின் வேலை வாய்ப்பு பறிக்கப்பட்டபோதும் அதை உடைத்து வெற்றி கண்டதும் இதே அரசு ஊழியர்கள் தான் என்பதையும், அரசு ஊழியர்களை பந்தாடிய அரசை, மக்கள் மன்றத்தில் மண்டியிட வைத்து மண்ணைக் கவ்வ வைத்ததும், மண்ணைக்கவ்விய ஆட்சி ஐந்து ஆண்டுகளுக்குபின் மீண்டும் ஆட்சியமைத்த போது அரசு ஊழியர்களை அழைத்து அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றிய வரலாற்றை நிகழ்த்திக் காட்டியதும் இதே அரசு ஊழியர்கள்தான் என்பதையும் மீண்டும் மீண்டும் இன்றைய ஆட்சியாளர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

காவல்துறை கொண்டு ஏவல் செய்வதை விட்டுவிட்டு ஊழியர்களின் பிரச்னைகளை உண்மையான உள்ள சுத்தியோடு பேசி, உரிய முடிவுகள் எடுப்பதே மக்கள் நலனில் உண்மையான அக்கரை கொண்ட அரசுக்கு அணி சேர்க்கும். அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை, அரசு நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்ட கோரிக்கைகளைக்கூட ஒரு அரசால் நிறைவேற்ற முடியவில்லை என்றால் அந்த அரசின் வீழ்ச்சிக்கு ஆரம்பப்புள்ளியாக இந்த போராட்டம் அமைந்துவிடக்கூடும் என்பதையும் ஆளும்கட்சி நினைவில் கொள்வது நல்லது.

ஒரு சிறு பொறிதான் காட்டையே அழிக்கும் நெருப்பாகிறது, ஒரு சிறு துளிதான் நாட்டை அழிக்கும் சுனாமியாக மாறுகிறது. அதுபோல் ஒரு சிறு போராட்ட வெறிதான் ஒரு ஆட்சியை புரட்டிப்போடும் வல்லமை படைத்தது என்பதை வணங்காமுடி அரசாங்கம் வருங்காலத்தில் புரிந்து கொள்ளும். பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டியவர்களே பிரச்சனைகளாக மாறினால் தீர்வுக்காணவேண்டிய பிரச்சனை என்பது மக்கள் தீர்ப்பாகத்தான் இருக்கும். தமிழக முதல்வர் அவர் உடனடியாக காவல்துறை அடக்குமுறைகளை கைவிட ஆணையிட்டு ஊரக வளர்ச்சித்துறை சங்கத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று மீண்டும் மீண்டும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்துகிறது,

**(மு.அன்பரசு)**
பொதுச் செயலாளர்,